## வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் (என்ஆர்சீபீ) – சாதாரண நடவடிக்கைகள் 2011

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளித்தல்களும் செயற்திட்டத்தினால் பேணிவரப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டப்பட்டிருந்தன என்பதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைப்பாடுகளின் படி மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவையென நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிச் செயலாற்றுகை

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 2,275,114,421 ஆக காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் ரூபா 2,276,263,846 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு மாத காலப்பகுதிக்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினங்களின் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின வகை | 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | 2010 ஒக்தோபர் 22 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாம் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| அலுவலக உபகரணங்கள் | 1,100,215 | - | 1,100,215 |
| சிவில் வேலைகள் | 2,087,182,261 | - | 2,087,182,261 |
| மதியுரைஞர் மேற்பார்வை | | | |
| - தேசிய நெடுஞ்சாலைகள் | 56,237,195 | - | 56,237,195 |
| - மாகாண | 79,553,021 | - | 79,553,021 |
| நிலஅளவை/பரிசோதனைக் கட்டணம் | 1,053,376 | - | 1,053,376 |
| அதிகரிக்கும் செலவினம் | 24,881,124 | - | 24,881,124 |
| வட்டிகள்/பொறுப்புக் கட்டணம் | 23,477,229 | 1,149,425 | 24,626,654 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் | 1,630,000 | - | 1,630,000 |
| மொத்தம் | 2,275,114,421 | 1,149,425 | 2,276,263,846 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கட்டுநிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அத் திகதியில் உள்ளவாறான அக் கணக்கின் மீதி என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொ | ரூபா |
|---|---|---|
| ஆரம்ப கட்டுநிதி | 135,098.89 | 14,960,994 |
| கூட்டுக: மீளப்பெறுதல்கள் | 136,134.49 | 14,958,235 |
| அந்நியச்செலாவணி பரிமாற்று இலாபம் | - | 180,154 |
| | 271,233.38 | 30,099,383 |
| கழிக்க: மீளெடுத்தல்கள் | 244,105.77 | 27,009,513 |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 27,127.61 | 3,089,870 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,659,798,683 மொத்தமான தொழில்தொடக்க முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த பிடித்து வைத்தல் பணங்கள் நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) தொடர்புடைய அதிகாரத்தரப்பினரிடமிருந்து விலைமதிப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாது ஒரு வருட காலப்பகுதிக்கான அலுவலகக் கட்டிட வாடகை முற்பணமாக மீளாய்வாண்டில் ரூபா 2,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

10 ஒப்பந்தப் பொதிகளிற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு உதவியமைக்காக மீளாய்வாண்டில் 13 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 935,000 மொத்தமான படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இரண்டு கூட்டங்களிற்கான வருகை விபரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டிருக்காத உத்தியோகத்தர்களிற்கும் அவ்வாறான படிகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 சொத்துக்களைப் பயன்படுத்தல்

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 129,300 பெறுமதியான கணனிகளையும் துணைச்சாதனங்களையும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2012 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறும் பயனற்று இருந்தது.

### 3.4 நிதியங்களின் பாவனை

2010 ஆம் ஆண்டுக்கான அரசாங்க பாதீட்டின் படி ரூபா 5,000,000,000 நிதி ஏற்பாடு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தலைப்பு 117, நிகழ்ச்சித்திட்டம் 02, கருத்திட்டம் 04 இன் கீழ் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்தது. இருந்த போதிலும், மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் செயற்திட்டச் செயற்பாடுகளிற்காக ரூபா 2,275,114,421 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 திட்டமிடல் மற்றும் மேற்பார்வை

தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,121,851 செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 செயலாற்றல் மீளாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாவிருந்த தகவல்களின் படி 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 10 ஒப்பந்தப் பொதிகளின் பௌதீகச் செயலாற்றல் வருமாறு

| ஒப்பந்தப் பொதி | தொடங்கப்பட்ட திகதி | முடிவுறுத்த எதிர்பார்த்த திகதி | 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பௌதீகச் செயலாற்றல் |
|---|---|---|---|
| | | | % |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -1 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 15.80 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -2 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 18.40 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -3 | 2011 யூன் 7 | 2012 ஆக 30 | 19.60 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -4 | 2011 யூன் 7 | 2013 ஜன 27 | 41.00 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -5 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 50.80 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -6 | 2011 யூன் 7 | 2013 மே 27 | 27.00 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -7 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 51.60 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -8 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 27.00 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -9 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 40.50 |
| ஆர்டீஏ/என்ஆர்சீபீ/ஐசீபீ/ஏடீபீ/சீபீ -10 | 2011 யூன் 7 | 2012 நவம் 28 | 16.10 |

மேற்படி 10 ஒப்பந்தப் பொதிகளில் 08 ஒப்பந்தப் பொதிகள் 2012 இல் முடிவுறுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஒப்பந்த காலப்பகுதியில் 70% இன் போது பௌதீகச் செயன்முன்னேற்றம் 15% தொடக்கம் 52% வரையிலான வீச்சிலேயே காணப்பட்டது.